## முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு

| | | | | |
|---|---|---|---|---|
| வழக்கு எண் | OS | 237 | of | 2019 |

2028-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8-ம் நாளான இன்று

| | |
|---|---|
| வாதி/பிரதிவாதி<br>மனுதாரர்/எதிர்மனுதாரர் | தரப்பில் வா.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நெல்சன் சாமுவேல் | தந்தை பெயர் | |
| கிராமம் | | கணவர் பெயர் | |
| ஜாதி | | தாலுக்கா | |
| | | சமயம் | |
| தொழில் | | வயது | |

நாள்-08.04.2026

வா.சா.-1

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

பி.வா.சா.ஆ. 7 வழக்கு ரமேஷ் மீது தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அது money recovery suit என்றால் ஞாபகமில்லை. அந்த அ.வ.எண். 375/2018 என்றால் ஞாபமில்லை. அந்த வழக்கில் ரமேஷ் சொத்தை ரூ.50 லட்சத்திற்கு முயற்சித்தார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடைசியாக மேற்படி ரமேஷ் ரூ.45,60,000 க்கு கிரயம் பெறுவதாக சொன்னார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் நிறுவனத்தின் பெயர் square developers என்பதாகும், வேறு பெயர் இல்லை. square developers என்ற பெயரில்

ரமேஷ் மீது போட்ட அ.வ.எண் 375/201 வழக்கின் வழக்குரை பி.வா.சா.ஆ.15 ஆகும். பிரதிவாதி கொடுத்த புகாரின் பெயரில்போலீசார்புலன் விசாரணை செயத்இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.16 ஆகும். என்னுடைய 3 வது partner ராஜேஷ் பணத்தை அபகரித்து விட்டார் என்பது என்னடைய தரப்பு வழக்காகும். இந்த விவரத்தை வழக்குரையிலோ முதல் விசாரணையிலோ நான் சொல்லவில்லை என்றால் சரிதான். ஜானகிராமன் தற்காலிக பணியில் நாங்கள் அழைக்கும் போது வந்து வேலை செய்துவிட்டு செல்வார். அவ்வாறு 7,8 ஆண்டுகள் எங்களுக்கு வேலை பார்த்தார். அவர் எங்கள் அலுவலக ஊழியர் இல்லை. வெளி நபர்களுக்கும் வேலை செய்வார். சொத்திற்கான அசல் ஆவணங்கள் சொத்தின் உரிமையாளர்களிடம் தான் இருக்கும். கிரயப்பத்திரம் பதிவின் போது சொத்தின் உரிமையாளர் அசல் ஆவணங்களை கொண்டு வருவார்.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu